***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 38/2018**

P.W.1 திரு.கண்ணன் த/பெ.கோவிந்தசாமி நாள் – 01.08.2025.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

நான் கரூரில் இருந்து டெல்லி சென்றதற்கு பின்னிட்டு டெல்லியில் தான் குடும்பத்துடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான் . நான் டெல்லியில் இருந்து வந்து தான் அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான் . 1–ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த அடமானப்பத்திரமும் , 2–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரமும் ஒரே நாளில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பவர் பத்திரம் மற்றும் அடமானப்பத்திரம் ஆகிய இரண்டையும் படித்து பார்த்து விவரம் தெரிந்து தான் எனது மனைவி கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். அடமானப்பத்திரத்தில் மாதம் மாதம் வட்டி செலுத்துவதாக கண்டுள்ளது என்றால் சரிதான் . அடமானப்பத்திரத்தில் தொகையை இரண்டு வருடத்திற்குள் திரும்பி செலுத்த வேண்டுமென்று கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு வருட காலத்திற்குள் அடமானப்பத்திரத்தை இரத்து செய்வதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான் , வட்டி செலுத்தி வந்தார் . என் மனைவி அந்த வட்டியை மாதம் மாதம் செலுத்தவில்லை என்றால் முதல் மூன்று மாதங்கள் மட்டும் மாதம் மாதம் செலுத்தினார், பின்னிட்டு மூன்று மாதத்திற்கு ஒருமுறை செலுத்தி வந்தார் . அடமானப்பத்திரத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை வட்டி செலுத்த வேண்டுமென்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான் . முதல் மூன்று மாதங்களில் மாதம் மாதம் செலுத்தியதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல , ஆவணங்கள் உள்ளது . இரண்டு

வருடத்திற்குள் அடமானப்பத்திரத்தை இரத்து செய்ய கால அவகாசம் கேட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான் . அடமானப்பத்திரம் மற்றும் பவர் பத்திரம் எற்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . அடமானப்பத்திரம் சம்மந்தமாக 1-ம் பிரதிவாதிக்கு மட்டும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இரண்டு பிரதிவாதிகளுக்கும் அனுப்பினேன் , அதனை 2-ம் பிரதிவாதி வாங்கவில்லை . இரண்டு பிரதிவாதிகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் , ஆனால் தேதி மட்டும் குறிப்பிட்டுள்ளேன் . எனது வழக்குரையிலோ, பிரமாண ஆவணத்திலோ இரண்டு பிரதிவாதிகளுக்கும் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல . வா.சா.ஆ.5 முதல் வா .சா.ஆ.24 வரையிலான ஆவணங்கள் வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்பதால் தான் வழக்கிற்கு பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல . மேற்படி ஆவணங்களுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல . எனக்கு கடன் கொடுத்தது 1-ம் பிரதிவாதி தான் என்றால் சரியல்ல . 2-ம் பிரதிவாதி கடன் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . அடமான கடன் பத்திரம் சம்மந்தமாக வட்டிக்காக தான் தொகைகள் செலுத்தியதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல . நான் தொழில் சம்மந்தமாக செலுத்திய தொகைகளை வட்டிக்காக செலுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதிக்கும் , கார்த்திகேயனுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் , கார்த்திகேயன் 2-ம் பிரதிவாதியின் பங்குதாரர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தொழில் வரி செலுத்தியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல , தாக்கல் செய்திருக்கிறேன். 2000 ம் வருடம் முதல் 2015-ம் வருடம் வரை நான் தொழில் வரி கட்டியதற்கான ஆவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரிதான் .

அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்த மறுநாள் அசோக் நகரில் என் பெயரில் வீடு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல , அதற்கு 4 மாதத்திற்கு முன்பு வீடு வாங்கினேன். அந்த கிரயப்பத்திரத்தை பார்த்தால் எந்த தேதியில் வீடு வாங்கினேன் என்பது தெரியும் என்றால் சரிதான் . அசோக் நகர் வீட்டை அமிர்தராஜ் என்பவரிடம் இருந்து தான் கிரயம் வாங்கினேன் என்றால் ஜாகீர்உசேன் என்பவரிடமிருந்து நேரடியாக வாங்கினேன் . வா.சா.ஆ.15 ஆவணத்தில் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் , வங்கி முத்திரையில் தேதி உள்ளது . வா.சா.ஆ.19 ஆவணத்தில் என் பெயர் இல்லை என்றால் சரிதான் . நான் வட்டி கட்ட முடியாத நிலை ஏற்பட்டால் சொத்தை விற்றுவிட்டு அந்த கடனை செலுத்துமாறு கூறி தான் என் மனைவி , 2-ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றும் , அதன்படி நான் வட்டித்தொகையை செலுத்தாததால் 2-ம் பிரதிவாதி பவர் ஏஜென்ட் என்ற முறையில் கடனை செலுத்தி பாக்கி தொகையை என் மனைவியிடம் கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல . என் மனைவி பாக்கி கிரயத்தொகையை 12.01.2015 ல் பெற்றுக்கொண்டு ஒரு ரசீதும் வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல . தற்போது சொத்தின் விலை அதிகரித்ததால் மேற்படி உண்மைகளை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் கோரியுள்ளபடி எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*